**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.**

**முன்னிலை : திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், M.Com., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.
2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 16ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆனி திங்கள் 02ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.105/2025**

CNR No.TNDG100014382025

குற்றமுறையிடுபவர் – காவல் ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்.89/2025

எதிரியின் பெயர் – மலையாண்டி 37/2025 த/பெ.மங்கபாகன்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No.814/2020/RG/FI(P.Dis.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | |
| **CASE SUMMARY** | | | | | |
| (i) | The period of remand of the accused | : | Name of the Accused | Date of Arrest/Remand | Release on |
| | | | மலையாண்டி 37/2025 த/பெ.மங்கபாகன், வேம்பரளி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். | 27.02.2025 | 27.02.2025 |
| (ii) | Date of filing of the complaint/final report in the court | : | Filing of Complaint | Filing of Final Report | |
| | | | 27.02.2025 | 25.03.2025 | |
| (iii) | Date of committal of the cases to the Court of Sessions: | : | Nil | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:02:54 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iv) | Date of questioning of the accused under Section 228, 240 and 251 of the Code of Criminal Procedure 1973, as the case may be; | : | 19.11.2025ம் தேதி அன்று நத்தம் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்ட எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் குற்றம் குறித்து விளக்கி கூறப்பட்டது. | | | |
| (v) | Filing of all miscellaneous petitions and their results | : | Crl.M.P.No. | Date of Filing | Result | |
| (vi) | Date of Examination in Chief and Cross | : | | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | | PW1 | திருமதி.ராஜேஸ்வரி ( புகார்தாரர்) | 16.04.2026 | 16.04.2026 |
| | | | PW2 | திரு.நாகராஜன் (காயம்பட்ட சாட்சி) | 16.04.2026 | 16.04.2026 |
| | | | PW3 | திரு.மணி (எ) ஜெயமணி ( கண்ணுற்ற சாட்சி) | 16.04.2026 | 16.04.2026 |
| | | | PW4 | திரு.கண்ணன் ( கேள்வியுற்ற சாட்சி) | 16.04.2026 | 16.04.2026 |
| | | | PW5 | திரு.சொர்க்கம் ( பார்வை மகஜர் சாட்சி) | 16.04.2026 | 16.04.2026 |
| | | | PW6 | திரு.பிரவீன் குமார் ( மருத்துவர்) | 11.05.2026 | 11.05.2026 |
| | | | PW7 | திரு.கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) | 02.06.2026 | 02.06.2026 |
| (vii) | Date of examination of the accused under section 313 of the Code; | : | 05.06.2026 | | | |
| (viii) | Details of abscondance of an accused and his appearance /production, as the case may be; and | : | Nil | | | |
| (ix) | Grant of stay by superior courts and the results thereof | : | Sessions Court CMP Numbers | High Court No and Date of Stay | Result | |
| | | | Nil | | | |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:02:59 +0530

| | | |
|---|---|---|
| குற்றஞ்சாட்டு: | : | கடந்த 26.02.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் வாதி ராஜேஸ்வரிக்கு சொந்தமான TN 57 CW 4359 என்ற எண்ணுள்ள Dio 125 என்ற இருசக்கர வாகனத்தில் பரளி சென்று டீ வாங்கிவிட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நத்தம் TO மதுரை ரோட்டில் டோல்கேட்டிற்கு முன்பு உள்ள டிவேரட்டு பிரியும் இடத்தில் இருசக்கர வாகனத்தை வலதுபுறமாக திருப்ப நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 65 AJ 7078 என்ற எண்ணுள்ள லாரியை ஓட்டி வந்த எதிரி லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் மீது மோதியதில் நாகராஜனுக்கு இடது பக்க தலையிலும், கண் புருவம் வலது இடது கால் மொழியில் சிராய்ப்பு காயமும், இடது பக்க காது ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியதாக எதிரி மீது பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழும் குற்றம் சாட்டப்பட்டது. |
| எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை |
| நீதிபதியின் தீர்மானம் | : | இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. |
| தண்டனை (அ) உத்தரவு | : | எதிரி நிறைவேற்றி தந்த பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் சொத்துக்கள் குறித்த உத்தரவு இல்லை. |

இவ்வழக்கு 10.07.2025ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 05.06.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.S.S.ராமசுப்பிரமணியன் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:04 +0530

விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. **குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –**

கடந்த 26.02.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் வாதி ராஜேஸ்வரிக்கு சொந்தமான TN 57 CW 4359 என்ற எண்ணுள்ள Dio 125 என்ற இருசக்கர வாகனத்தில் பரளி சென்று டீ வாங்கிவிட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நத்தம் TO மதுரை ரோட்டில் டோல்கேட்டிற்கு முன்பு உள்ள டிவேரட்டு பிரியும் இடத்தில் இருசக்கர வாகனத்தை வலதுபுறமாக திருப்ப நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 65 AJ 7078 என்ற எண்ணுள்ள லாரியை ஓட்டி வந்த எதிரி லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் மீது மோதியதில் நாகராஜனுக்கு இடது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:14 +0530

பக்க தலையிலும், கண் புருவம் வலது இடது கால் மொழியில் சிராய்ப்பு காயமும், இடது பக்க காது ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியதாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 25.03.2025ம் தேதி பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிக்கு எதிரான இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 105/2025 என கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230ன் கீழ் 14.08.2025ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) குற்றப்பத்திரிக்கையில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் எதிரி மீது பிரிவுகள் 281, 125(b)BNSன் படியும் குற்றம் புரிந்துள்ளார் என்பதற்கு முதல் நோக்கு ஆதாரங்கள் இருந்ததால் 19.11.2025ம் தேதியன்று பிரிவு 263 BNSS ன் மேற்படி குற்றச்சாட்டுகளின் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:19 +0530

5) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் இல்லை. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

6) **இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து அறியப்பெரும் அரசு தரப்பு வழக்கின் விபர சுருக்கம் பின்வருமாறு:-**

6.1) கடந்த 26.02.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் வாதி ராஜேஸ்வரிக்கு சொந்தமான TN 57 CW 4359 என்ற எண்ணுள்ள Dio 125 என்ற இருசக்கர வாகனத்தில் பரளி சென்று டீ வாங்கிவிட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நத்தம் TO மதுரை ரோட்டில் டோல்கேட்டிற்கு முன்பு உள்ள டிவேரட்டு பிரியும் இடத்தில் இருசக்கர வாகனத்தை வலதுபுறமாக திருப்ப நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 65 AJ 7078 என்ற எண்ணுள்ள லாரியை ஓட்டி வந்த எதிரி லாரியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் மீது மோதியதில் நாகராஜனுக்கு இடது பக்க தலையிலும், கண் புருவம் வலது இடது கால் மொழியில் சிராய்ப்பு காயமும், இடது பக்க காது ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:25 +0530

ஏற்படுத்தியதாக அ.சா.1 ஆனவர் அ.சா.7 காவல் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணகுமார் என்பவரிடம் அ.த.சா.ஆ.1 புகார் செய்துள்ளார்.

6.2) மேற்படி புகாரை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட அ.சா.7 காவல் சார்பு ஆய்வாளர் கிருஷ்ணகுமார் கடந்த 27.02.2025ம் தேதி 19.00 மணிக்கு ராஜேஸ்வரி என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.89/2025 281, 125(a) BNS பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை தயார் செய்து 27.02.2025ம் தேதி 20.00 மணிக்கு சம்பவ இடமான நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு டோல்கேட் அருகில் சாட்சிகள் பட்டியல் சாட்சி 5 நடராஜன் மற்றும் அ.சா.5 சொர்க்கம் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.த.சா.ஆ.5** மாதிரி வரைபடம் வரைந்து **அ.த.சா.ஆ.6** பார்வை மகஜர் தயார் செய்துள்ளார். பின்னர் சம்பவ சாட்சிகள் ராஜேஸ்வரி, நாகராஜன், மணி, கண்ணன், நடராஜன் மற்றும் சொர்க்கம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியான மலையாண்டி என்பவரை கடந்த 28.02.2025ம் தேதி 14.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

6.3) இவ்வழக்கில் காயம்பட்ட நபரான நடராஜன் என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் அ.சா.6 பிரவீன்குமார் என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.3 காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கின் சட்டபிரிவை 281, 125(a)

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.16 17:03:29 +0530

BNS என்பதிலிருந்து 281, 125(b) BNSஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து **அ.த.சா.ஆ.7** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட டாடா பிரைமா வாகனத்தையும், TN 57 CW 4359 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா DIO 125 இருசக்கர வாகனத்தையும் அ.த.சா.ஆ.8 மற்றும் அ.த.சா.ஆ.10 வேண்டுகோள் கடிதம் கொடுத்து வாகன தணிக்கைக்கு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.கருப்பசாமி என்பவரை விசாரித்து அ.த.சா.ஆ.9 மற்றும் அ.த.சா.ஆ.11 மோட்டார் வாகன அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்து இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து 25.03.2025ம் தேதி எதிரி மீது 281, 125(b) BNS பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

7) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை குறித்து பிரிவு 351(1)(b) of BNSS, 2023–ன்ன் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார். அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரிக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

8) எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் எதிரி தரப்பில், வாகனத்தை எதிரி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.16 17:03:35 +0530

வந்ததாக கூறுவது உண்மையல்ல என்றும், வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், எதிரி தான் வாகனத்தை ஓட்டி வந்ததாக அரசு தரப்பு சாட்சிகள் யாரும் சாட்சியமளிக்காத நிலையிலும், எனவே எதிரியை வழக்கிலிருந்து விடுதலை செய்து உத்தரவிடவேண்டியது அவசியம் என வாதிடப்பட்டுள்ளது.

9) **தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

10) **தீர்வு**

10.1) கடந்த 26.02.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் வாதி ராஜேஸ்வரிக்கு சொந்தமான TN 57 CW 4359 என்ற எண்ணுள்ள Dio 125 என்ற இருசக்கர வாகனத்தில் பரளி சென்று டீ வாங்கிவிட்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நத்தம் TO மதுரை ரோட்டில் டோல்கேட்டிற்கு முன்பு உள்ள டிவேரட்டு பிரியும் இடத்தில் இருசக்கர வாகனத்தை வலதுபுறமாக திருப்ப நின்று கொண்டிருந்த போது அதே ரோட்டில் அதே திசையில் அவருக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி TN 65 AJ 7078 என்ற எண்ணுள்ள லாரியை ஓட்டி வந்த எதிரி லாரியை அதிவேகமாகவும்,

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:39 +0530

அஜாக்கிரதையாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜன் மீது மோதியதில் நாகராஜனுக்கு இடது பக்க தலையிலும், கண் புருவம் வலது இடது கால் மொழியில் சிராய்ப்பு காயமும், இடது பக்க காது ஆகிய இடங்களில் கொடுங்காயத்தையும் ஏற்படுத்தியதாகவும் அதை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிடமே உள்ளது. எதிரி தரப்பில் வழக்கில் கூறப்படுவது போல விபத்தானது ஏற்படவில்லை என்றும், எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

10.2) எதிரி பொது சாலையில் வாகனத்தை அதிவேகமாக ஓட்டி வந்து கவனக்குறைவாக செயல்பட்டு அதன் விளைவால் வாதி ராஜேஸ்வரியின் அப்பா நாகராஜனுக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் கூறப்படும் நிலையில் அதனை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க வேண்டியது அரசு தரப்பின் கடமையாகும். மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 மற்றும் பார்வை மகஜர் அ.த.சா.ஆ.6 ஆகியவற்றின் வாயிலாக சம்பவமானது நத்தம் – மதுரை பைபாஸ் ரோடு டோல்கேட் அருகில் நடந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. அ.த.சா.ஆ.1 புகார் மனுவிலும் சம்பவ இடமாக அ.த.சா.ஆ.5, அ.த.சா.ஆ.6ல் கண்ட இடத்தையே தெரிவிக்கப்பட்டுள்ளது. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 சொர்க்கம் தனது சாட்சியத்தில் "சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒரு நாள் விபத்து நடந்ததற்கும் மறுநாள் நான் என் தோட்டத்திற்கு சென்று கொண்டிருந்தபோது டோல்கேட்டிற்கு வடக்குப்பக்கம் நத்தம் போலீசார்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.16 17:03:48 +0530

வந்து விபத்து சம்பந்தமாக விசாரணை செய்து கொண்டிருந்தார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து சாட்சியாக கையொப்பம் கேட்டதன்பேரில் நான் கையொப்பம் செய்தேன்" என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம் பார்வை மகஜர் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எனவே சம்பவ இடம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

10.3) மேலும் TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட டாடா பிரைமா வேனின் அ.த.சா.ஆ.9 மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையின் வாயிலாக Front Left side H/L doom broken, front bumper left side slightly pressing inside and dent" சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. மேற்படி வாகன ஆய்வு அறிக்கை வாயிலாக வாகனத்தின் முன்பக்க இடதுபுறம் சேதம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. அ.த.சா.ஆ.11 ஆன TN 57 CW 4359 என்ற பதிவு எண் கொண்ட ஹோண்டா DIO 125 இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கையில் "front left side scoop / show set scratched, Rear left side Body scratched, Rear Danger light any broken, Rear Body damaged, Rear Right side body broken" ஆகிய சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும், விபத்தானது வாகன இயந்திர கோளாறினால் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதை காண முடிகிறது. அ.த.சா.ஆ.3 நாகராஜன் என்பவரின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்று அறிக்கைகளில் "இடது பக்க தலையில், இடது கண் புருவம், இடது பக்க காது, வலது இடது கால் மொழி ஆகிய இடங்களில்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:51 +0530

காயம் ஏற்பட்டுள்ளது என்றும், அவருக்கு ஏற்பட்ட காயங்களின் தன்மை குறித்து கொடுங்காயம்" என்று சான்றழிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நாகராஜனுக்கு விபத்தின் வாயிலாக கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. இதன்மூலம் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் சம்பவ இடத்தில் வாகன விபத்து ஏற்பட்டுள்ளது என்பதும், அந்த விபத்தில் நாகராஜனுக்கு கொடுங்காயம் ஏற்பட்டுள்ளது என்பதும் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் விபத்து ஏற்பட்டுள்ளதா என்பதை காண வேண்டியதுள்ளது.

10.4) விபத்தானது எதிரியின் அதிவேகம், கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டுள்ளதா என்பதும், எதிரி தான் TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட டாடா பிரைமா வேனை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினாரா என்பதையும், வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ள விதத்தில் விபத்து நடந்துள்ளதாக என்பதையும் ஆராய்ந்து பார்க்கும் போது, அ.த.சா.ஆ.1 புகார் மனுவில் "26.02.2025ம் தேதி காலை சுமார் 05.00 மணிக்கு என் மகன் உடல்நிலை சரியில்லாததால் என் அப்பா நாகராஜன் எனக்கு சொந்தமான TN 57 cw 4359 என்ற எண்ணுள்ள இரு சக்கர வாகனத்தில் பரளி சென்று டீ வாங்கிவிட்டு வருவதாக சொன்னார். என் அப்பா சென்ற சிறிது நேரத்தில் பொடுகம்பட்டியை சேர்ந்த பூவலிங்கம் மகன் மணி என்பவர் எனக்கு போன் செய்து என் அப்பா ரத்த வெள்ளத்தில் காயம்பட்டு கிடப்பதாக எனக்கு தகவல் கொடுத்தார்" தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை காண முடிகிறது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:03:56 +0530

10.5) அ.சா.1 ராஜேஸ்வரி ( புகார்தாரர்) தனது சாட்சியத்தில் "கடந்த 26.02.2025ம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் எனது மகன் கோபிக்கு உடல்நிலை சரியில்லாததால் என் அப்பா நாகராஜ் என்பவர் டீ வாங்குவதற்காக எங்களுக்கு சொந்தமான TN 57 CW 4359 என்ற பதிவெண்கொண்ட இருசக்கர வாகனத்தில் சென்று டீ வாங்கிவிட்டு திரும்பி வரும்போது டோல்கேட் அருகில் உள்ள எங்கள் வீட்டிற்கு திரும்பும் டிவைடர் அருகே வடக்கிலிருந்து தெற்கே வந்த TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட லாரி கிராவல் ஏற்றிக்கொண்டு அதிவேகமாக வந்து என் அப்பாவின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது அருகில் இருந்த ஒரு நபர் போன் மூலம் எனக்கு தகவல் சொன்னதன்பேரில் எங்கள் வீட்டின் அருகில் உள்ள சம்பவ இடத்தில் நான் சென்று பார்த்தபோது என் அப்பா ரத்த வெள்ளத்தில் கிடந்தார். எனக்கு போன் மூலம் தகவல் சொன்ன ஜெயமணி என்பவரும் அருகில் இருந்தார் என்றும் பின்னர் நான் எனக்கு தகவல் சொன்ன ஜெயமணி என்பவரிடம் விசாரித்தபோது, மங்கபாகன் மகன் மலையாண்டி என்பவர் தான் லாரியை ஓட்டிவந்து விபத்து ஏற்படுத்தியதாக கூறினார். ஆஜர் எதிரியை பக்கத்து ஊர்க்காரரர் என்ற முறையில் எனக்கு ஏற்கனவே தெரியும். அவர் K.R.K.லாரியை ஓட்டுக்கின்ற விபரமும் எனக்கு தெரியும், அதனடிப்படையில் நான் போலீசாரிடம் புகார் மனு கொடுத்தேன்" என்றும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தின் வாயிலாக ஜெயமணி என்பவர் சொல்லி தான் விபத்து ஏற்படுத்திய வாகனம் மற்றும் எதிரி குறித்த விபரங்கள் தெரிய வந்ததாக குறிப்பிட்டுள்ளதை காண முடிகிறது.

J.AAFREEN
BEGUM, M.COM.,
L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:00 +0530

10.6) மேலும் அ.சா.1 தனது குறுக்குவிசாரணையில் " **எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது என்றாலும், கேள்விப்பட்டு தான் தெரியும் என்றாலும் சரிதான். எனது அப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு வாகன ஓட்டுனர் உரிமம் இல்லை என்றால் சரிதான். புகாரை சம்பவம் நடந்த அன்றைய தினமே கொடுத்தேன் என்றால் சரிதான். புகார் மனுவில் எனது தந்தை சாலையை கடக்க முயன்ற போது விபத்து நடந்ததாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான்**" என்று தெரிவித்துள்ளார். புலன் விசாரணை அதிகாரி தனது குறுக்கு விசாரணையில் "அ.சா.1 சம்பவம் குறித்து கேள்விப்பட்டு தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தனக்கு தகவல் கொடுத்த நபர் ஜெயமணி என்று சொல்லவில்லை என்றால் சரிதான், மணி என்று சொல்லியுள்ளார். சம்பவம் நடந்த இடம் ஆனது தேசிய நான்கு வழிச்சாலை என்றாலும், டோல்கேட் அருகே நடந்தது என்றாலும் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். அ.சா.1 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பதும், அவர் சம்பவம் குறித்து கேள்விப்பட்ட சாட்சி என்பது தெரியவருகிறது. மேலும், காயம்பட்ட சாட்சியான நாகராசுக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்பது தெரியவருகிறது.

10.7) அரசு தரப்பில் சம்பவத்தில் காயம்பட்ட சாட்சியான அ.சா.2 நாகராஜன் தனது சாட்சியத்தில் "சுமார் ஒரு வருடத்திற்கு முன்பாக ஒருநாள் என் மகள் அ.சா.1ன் மகனுக்கு உடல்நிலை சரியில்லாததால் நான் இருசக்கர வாகனத்தில் சென்று காப்பியும், காய்ச்சல் மாத்திரையும் வாங்கிகொண்டு திரும்பி வருவதற்காக நின்று கொண்டிருந்தபோது

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.16 17:04:05 +0530

நத்தத்திலிருந்து வந்த லாரி என் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அதில் எனக்கு இடதுபக்க தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, காதில் ரத்தம் வழிந்தது. இன்று வரை காதில் நீர் வடிந்து கொண்டு இருந்தது. அதனால் எனக்கு காது சரியாக கேட்கவில்லை. இடது முழங்காலில் பலத்த காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை மூலம் பிளேட் வைக்கப்பட்டுள்ளது" என்று சாட்சியமளித்துள்ளார். மேலும், அவர் தனது குறுக்குவிசாரணையில் நான் சாலையை கடக்க முற்பட்ட போது தான் விபத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் ரோட்டின் கிழக்கு பக்கம் சாலை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தேன். டம் என்று சத்தம் கேட்டது அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று தெரியாது. ஜெயமணி என்பவர் நான் வண்டியில் இருந்து கீழே விழுந்து 15 நிமிடத்திற்குள் சம்பவ இடத்திற்கு வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது நான் மயக்கமாகிவிட்டேன். எனக்கு பின்னால் யாராவது வந்தார்களா என்றால் இல்லை. எனக்கு வண்டி ஓட்டுவதற்கு லைசன்ஸ் இல்லை என்றால் சரிதான். நான் இழப்பீடு தொகை பெறுவதற்காக திண்டுக்கல் மாவட்டத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்" என்று சாட்சியம் அளித்துள்ளார். அவர் எதிரியை அடையாளம் காட்டி சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அவர் சாட்சியத்தில் ரோட்டின் கிழக்கு பக்கம் சாலை கடப்பதற்காக நின்று கொண்டிருந்தேன் என்று தெரிவித்துள்ளார்.

10.8) சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியான அ.சா.3 மணி (எ) ஜெயமணி அவர் தனது சாட்சியத்தில் "ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 2025ம் வருடம் 2ம் மாதம் ஒரு நாள் காலை சுமார் 5.30

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:09 +0530

மணியளவில் அ.சா.1ன் வீட்டின் அருகே டோல்கேட் செல்வதற்கு முன்பாக அ.சா.2 இருசக்கர வாகனத்தில் சென்றுவிட்டு வீட்டிற்கு திரும்புவதற்காக சாலையின் இடதுபக்கம் நின்றுகொண்டிருந்தார். நான் அவருக்கு பின்னால் சென்று கொண்டிருந்தேன். அப்போது நத்தத்திலிருந்து வந்த லாரியை ஆஜர் எதிரி அதிவேகமாக ஓட்டி வந்து அ.சா.2ன் மீது மோதிவிட்டு ரிவர்ஸ் எடுத்து நிற்காமல் முன்பக்கமாக வேகமாக சென்றுவிட்டார்" என சாட்சியமளித்துள்ளார். அவர் தனது குறுக்குவிசாரணையில் "அ.சா.2 நடராஜன் சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் நான் எனது இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். நான் சுமார் 20 அடி தூரத்தில் இருந்தேன். லாரி என்னை முந்தி சென்றது. லாரி என்னை முந்தி சென்றதால் லாரியின் பின்பக்கத்தை தான் நான் பார்க்க இயலும் என்றாலும், அதன் முன் பக்கத்தை பார்க்க இயலாது என்றாலும் சரிதான். லாரியை ரிவர்ஸில் எடுத்த பிறகுதான் விபத்து ஏற்பட்டு நடராஜன் அடிபட்ட விபரம் தெரியும் என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். அ.சா.3 விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் எண்ணை சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை. அவர் மேற்படி விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பின்புறத்தை பார்த்ததாகவும், முன்புறத்தை பார்க்கவில்லை என்று தெரிவித்துள்ளார். எதன் அடிப்படையில் எதிரி தான் வாகனத்தை ஓட்டி வந்தாக வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதை காண வேண்டியதுள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:14 +0530

10.9) மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் "அ.சா.1ற்கு போனில் தகவல் சொன்னபோது மேற்படி விபரத்தை சொன்னேன் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகே டோல்கேட் உள்ளது என்றால் சரிதான். டோல்கேட்டில் கேமராக்கள் உள்ளது என்றாலும் அதை பார்த்தால் விபரம் தெரியும் என்றாலும் சரிதான். டோல்கேட்டில் உள்ள நபர்கள் விபத்தை பார்த்தார்கள் என்றால் சரிதான். டம் என்று சத்தம் கேட்ட பிறகுதான் அடிபட்ட நபர் நடராஜன் என்பதை தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்" என தெரிவித்துள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக உள்ள அ.சா.3 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சத்தம் கேட்டு தான் பார்த்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. மேலும், டோல்கேட்டில் உள்ள நபர்களை சாட்சியாக சேர்க்கவில்லை என்பது தெரியவருகிறது.

10.10) சம்பவத்தை கேள்வியுற்ற சாட்சியான அ.சா.4 கண்ணன் தனது சாட்சியத்தில் "கடந்த 26.02.2025ம் தேதி காலை 5.30 மணி முதல் 6.00 மணியளவில் எங்கள் வீட்டிற்கும், அருகில் உள்ள டோல்கேட்டிற்கும் அருகில் ஸ்கூட்டி இருசக்கர வாகனத்தில் என் தங்கை மகனுக்கு காய்ச்சல் என்பதால் டீ வாங்க சென்றிருந்தபோது ஆஜர் எதிரி மலையாண்டி என்பவர் நத்தத்திலிருந்து மதுரை நோக்கி லாரியில் எம்சாண்ட் ஏற்றிக்கொண்டு வந்து என் அப்பாவின் இருசக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்படுத்தியதாக எனது தங்கை அ.சா.1 சொன்னதன்பேரில் சம்பவ இடம் சென்று பார்த்தோம். என் அப்பாவிற்கு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:17 +0530

தலையிலும், இடது காலிலும் பலத்த காயம் ஏற்பட்டும், காதில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது" என சாட்சியமளித்துள்ளதன் மூலம் அ.சா.4 கேள்வியுற்ற சாட்சியாகவே உள்ளார் என்பது தெரியவருகிறது. மேலும் சம்பவ இடம் சென்று தனது தந்தையை பார்த்ததாக அ.சா.1 மற்றும் அசா.4 தெரிவித்துள்ளார்கள்.

10.11) மருத்துவரான அ.சா.6 தனது சாட்சியத்தில் அ.சா.2ற்கு இடதுபக்க தலை பகுதியில் 4 x 1 x 0.5 அளவுள்ள Y என்ற அடையாளம் தலைகீழாக இருப்பதைப் போன்ற பிளவு காயம் காணப்பட்டது. இடது கண் இமைகளில் வீக்கத்துடன் கூடிய ரத்தக்கட்டு காயம் காணப்பட்டது. இடது முட்டியில் 5 x 3 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. வலது முட்டியில் 3 x 3 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இடது முழங்காலில் 2 x 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இடது கன்னத்தில் 2 x 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இடது நெற்றியில் 2 x 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது. இடது கை விரல் மொலிகளில் 2 x 2 செ.மீ அளவுள்ள சிராய்ப்பு காயம் காணப்பட்டது என்றும் மேற்படி காயங்கள் லாரி அல்லது நான்கு சக்கர வாகனங்கள் மோதினால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் அவர் தனது குறுக்குவிசாரணையில் "இவ்வழக்கில் காயம்பட்ட நபர் தன்னிச்சையாக கீழே விழுந்ததாக விபத்து பதிவேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் உடன் வந்த நபர் அவ்வாறு சொன்னதால் அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது. காயம்பட்ட நபரின் மகள் உடன் வந்தாரா என்றால் எனக்கு தெரியாது. ரோட்டில் எந்தப்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:23 +0530

பகுதியில் கீழே விழுந்ததாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். கால்களில் பிளேட் பொருத்தும் அளவிற்கு காயங்கள் இல்லை என்றால் சரிதான். அதிகாலை நேரம் என்பதாலும், காயம்பட்ட நபர் 60 வயதிற்குமேல் இருப்பதாலும் ரத்தத்தை பார்த்ததாலும், அந்த அதிர்ச்சியில் அவருக்கு சுயநினைவு இல்லாமல் இருக்க வாய்ப்புள்ளது என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். அ.சா.1 மற்றும் அ.சா.4 விபத்து பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடம் சென்று பார்த்ததாகவும், காயம்பட்டு கிடந்த அ.சா.2–யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும் தெரிவிக்கும் நிலையில் விபத்து பதிவேட்டில் விபத்தினால் காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை என்பதும், தன்னிச்சையாக விழுந்ததால் காயம் ஏற்பட்டதாக தெரிவித்துள்ளது முரண்பட்டுள்ளது.

10.12) புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 சிவராமகிருஷ்ணன் தனது குறுக்குவிசாரணையில் "சம்பவம் நடந்த இடத்தில் டயர் மார்க் மற்றும் சிராய்ப்பு இருந்த விபரங்கள் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். டோல்கேட் என்பதால் வாகனங்கள் மெதுவாக சென்று தான் கடக்க முடியும் என்றால் டோல்கேட்டிற்கு அருகே செல்லும்போதுதான் அவ்வாறு மெதுவாக செல்ல முடியும். வழக்கில் சம்பவத்தை பார்த்த நபர்கள் யாரும் சம்பவ வாகனங்களின் வேகம் குறித்து எண்ணிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ரோட்டை கடப்பதற்கு பலகைகளோ சாலையில் கோடுகளோ சிக்னல் இல்லாமல் உள்ளது என்றால் சரிதான். பொதுவாக நான்கு வழிச்சாலையில் சாலையை கடக்கும் போது இரு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:27 +0530

பக்கங்களிலும் வாகனங்கள் வருகிறதா என்பதை சரிபார்த்த பின்னரே கடக்க முடியும் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2 மற்றும் சம்பவத்தை பார்த்த சாட்சிகள் எனது விசாரணையில் அ.சா.2 ரோட்டை கடப்பதற்கு முன்பு இருபுறமும் பார்த்து சமிக்கைகள் செய்து கடக்க முயன்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். **சம்பவம் ஆனது ரோட்டின் கிழக்கு பக்கத்தில் நடைபெறவில்லை என்றால் சரிதான்.** அ.சா.2 எனது விசாரணையில் தான் அவருக்கு பின்னால் வாகனங்கள் வந்ததாகவோ அவர்கள் சம்பவத்தை பார்த்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான்.... என்று சாட்சியமளித்துள்ளார்.

10.13) அரசு தரப்பு வழக்குப்படி எதிரி லாரியை வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நத்தம் TO மதுரை ரோட்டில் டோல்கேட்டிற்கு முன்பு உள்ள டிவேரட்டு பிரியும் இடத்தில் விபத்தை ஏற்படுத்தியதாக தெரிவித்துள்ள நிலையில், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் கிழக்கு பக்கம் அதாவது சாலையின் ஓரத்தில் நின்றிருந்ததாக தெரிவித்துள்ளார்கள். இருசக்கர வாகனம் சாலையின் டிவைடர் வரை இழுத்து செல்லப்பட்டது என்று புகார்மனு மற்றும் போலீசாரின் சாட்சிய விசாரணையில் சொல்லப்படவில்லை என்றும், வழக்கிற்காக நீதிமன்ற விசாரணையில் தெரிவித்துள்ளார்கள் என்றும் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதம் ஏற்புடையதாகவே உள்ளது. ஏனெனில், லாரியின் வேகம் மற்றும் சாலையின் டயர் மார்க், சாலையில் ஏற்பட்ட சேதம் ஆகியவை குறித்த முக்கிய விபரங்கள் வழக்கில் தெரிவிக்கப்படவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:32 +0530

உள்ளது. மேலும் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 அவரது சாட்சியத்தில் சம்பவத்தை டோல்கேட்–ல் இருந்த பணியாளர்கள் விபத்தை பார்த்தார்கள் என்று தெரிவித்துள்ள நிலையில் அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை. மேலும் சம்பவ இடத்திற்கு அருகே டோல்கேட் உள்ளது என்றால் சரிதான். டோல்கேட்டில் கேமராக்கள் உள்ளது என்றாலும் அதை பார்த்தால் விபரம் தெரியும் என்றாலும் சரிதான் என கூறுவதன் மூலம் கேமரா பதிவுகள் நீதிமன்றத்தில் தாக்கல் இல்லை என்பது தெரியவருகிறது. புலன்விசாரணை அதிகாரி சாட்சியத்தில் சிசிடிவி கேமராவின் பதிவுகளில் விபத்து குறித்த பதிவுகள் இல்லை என்று தெரிவித்துள்ளார். அ.சா.3 தெரிவித்துள்ளது போல் நடந்திருந்தால் எதிரி டோல்கேட்–யை தாண்டி தான் சென்றிருப்பார். அவ்வாறான நிலையில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை டோல்கேட்டில் நிறுத்த வாய்ப்புக்கள் உள்ளது. மேலும் டோல்கேட்டில் மேற்படி வண்டி பதிவு எண்ணையும், எதிரியையும் எளிதாக அடையாளம் காணலாம் என்ற நிலையில், அதற்கான வாகனம் மற்றும் எதிரி குறித்த பதிவுகள் மற்றும் மற்ற முக்கிய விபரங்களை தாக்கல் செய்யாதது வழக்கிற்கு பின்னடைவாகவே உள்ளது.

10.14) எதிரி தரப்பில் காயம்பட்ட நபர் நாகராஜன் தான் சம்பவ இட சாலையானது அகலமான சாலை என்பதும், வாகனங்கள் அடிக்கடி சென்று வரக்கூடியது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள நிலையிலும், முக்கிய நான்குவழிசாலையில் சாலையை கடக்க தேவையான முன்எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்காமல் திடீரென சாலையை கடக்க முற்பட்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது என்றும், சாட்சிகள் எதிரியை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:35 +0530

அடையாளம் காட்டவில்லை என்றும், டோல்கேட்டில் உள்ள நபர்களை விசாரித்திருந்தால் யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பது அறிய வந்திருக்கும் என்றும், எதிரியால் வாகன விபத்து ஏற்படவில்லை என்றும் எடுத்துரைக்கப்பட்டது. இவ்வழக்கில் எதிரி எவ்வளவு வேகத்தில் வந்தார் என்பதற்கு சாட்சியம் இல்லை. மேலும், புகார் மனு மற்றும் சாட்சிய விசாரணையில் விபத்து சாலையின் எந்த பகுதியில் நடைபெற்றது என்று தெரிவிக்கவில்லை. இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே உள்ளது. மேற்படி காரணங்களின் அடிப்படையில் அரசு தரப்பு வழக்கில் சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன் எதிரி தரப்பு எதிர்வாதத்தை வலு சேர்க்கும் வகையில் அமைந்து இருப்பதும் தெரிய வருகிறது. அரசு தரப்பு சாட்சியங்களை முழுமையாக பரிசிலனை செய்த வகையில் விபத்தில் சம்பந்தப்பட்ட TN 65 AJ 7078 என்ற பதிவெண்கொண்ட டாடா பிரைமா வேனை எதிரி அதிவேகமாக ஓட்டி வந்ததாகவோ, எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதாகவோ அதன் விளைவால் நாகராஜனுக்கு கொடுங்காயம் ஏற்பட்டதை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் சாட்சியங்கள் இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, எதிரியின் மீதான பிரிவுகள் 281, 125(b) BNS படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் தீர்வு செய்கிறது.

11. இறுதியாக, எதிரி மீதான பிரிவுகள் 281, 125(b) BNSன் கீழ் சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.16 17:04:40 +0530

நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரியை மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கு சொத்தின் கீழ் உத்தரவு இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் அவையறிய 16.06.2026ம் தேதி பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.16 17:04:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், நத்தம்.

<u>அரசுத் தரப்பு சாட்சிகள் –</u>

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 16.04.2026 | திருமதி.ராஜேஸ்வரி ( புகார்தாரர்) |
| அ.சா.2 | 16.04.2026 | திரு.நாகராஜன் (காயம்பட்ட சாட்சி) |
| அ.சா.3 | 16.04.2026 | திரு.மணி (எ) ஜெயமணி ( கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | 16.04.2026 | திரு.கண்ணன் ( கேள்வியுற்ற சாட்சி) |
| அ.சா.5 | 16.04.2026 | திரு.சொர்க்கம் ( பார்வை மகஜர் சாட்சி) |
| அ.சா.6 | 11.05.2026 | திரு.பிரவீன் குமார் ( மருத்துவர்) |
| அ.சா.7 | 02.06.2026 | திரு.கிருஷ்ணகுமார் (புலன் விசாரணை அதிகாரி) |

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–</u>**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 27.02.2025 | புகார் மனு |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.5 | 27.02.2025 | **பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம்** |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.6 | 26.02.2025 | **விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் (நாகராஜ்)** |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.7 | 27.02.2025 | **முதல் தகவல் அறிக்கை** |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.7 | 27.02.2025 | மாதிரிவரைபடம் |
| அ.த.சா.ஆ.6 / அ.சா.7 | 27.02.2025 | பார்வைமகஜர் |
| அ.த.சா.ஆ.7 / அ.சா.7 | 11.03.2025 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.8 / அ.சா.7 | 28.02.2025 | **வேண்டுகோள் கடிதம்** |
| அ.த.சா.ஆ.9 / அ.சா.7 | 28.02.2025 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (**TN 65 AJ 7078)** |
| அ.த.சா.ஆ.10 / அ.சா.7 | 24.03.2025 | **வேண்டுகோள் கடிதம்** |
| அ.த.சா.ஆ.11 / அ.சா.7 | 24.03.2025 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை (**TN 57 CW 4359 )** |

**<u>அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் :</u>–** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>–**

இல்லை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**<u>குறிப்பு –</u>**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.16 17:04:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.